# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.

| | |
|---|---|
| **Calendar** | : **Case No.359/2014** |
| **Miscellaneous** | : |
| **Summary Trial** | : |
| **Maintenance** | : |
| **Deposition of witness for prosecution** | : **P.W**.5.குமாரவேல் |
| **Father's Name** | : கருப்பையா |
| **Village** | : |
| **Taluk** | : |
| **Caste** | : |
| **Calling** | : |
| **Religion** | : |
| **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 16.02.2022

**இவ்வழக்கில் அரசு தரப்பு 12வது சாட்சியாக எழுமலை கரூர் வைசியா வங்கி கிளை மேலாளர் திரு.பலராம்குமார் என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார். அவர் தற்போது பணி மாறுதலில் சென்றுவிட்ட காரணத்தினால் அரசு தரப்பில் தற்போதைய கிளை மேலாளரை சாட்சியாக விசாரிக்க கோரி சி.ஆர்.எம்.பி.எண்.3228/2021 மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு 08.12.2021 ஆம் தேதி அனுமதிக்கப்பட்டு தற்போதைய கிளை மேலாளர் கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.**

**மு.வி:**

நான் தற்போது எழுமலை கரூர் வைசியா வங்கி கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் வங்கியில் ஏற்கனவே கிளை மேலாளராக பணிபுரிந்த சாட்சி பலராம்குமார் என்பவரின் கையெழுத்து எனக்கு தெரியும். எழுமலை கரூர் வைசியா வங்கி கிளையில் 2வது எதிரி பாண்டிமீனா கணக்கு வைத்துள்ளார். அவரது வங்கி கணக்கு எண்.1226155000040156 ஆகும். மேற்படி வங்கி கணக்கின் 01.01.2012 முதல் 10.11.2013 ஆம் தேதி வரை உள்ள கணக்கு பதிவேட்டை என்னுடைய முந்தைய வங்கி மேலாளர் போலீசாரிடம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி கணக்கு பதிவேடு **அ.சா.ஆ.4.** அதில் **23.08.2012** ஆம் தேதி அன்று G.சுமதி என்பவர் கணினி பரிவர்த்தனை மூலம் **ரூபாய் 50** ஆயிரம் பாண்டிமீனா கணக்கிற்கு செலுத்தியுள்ளார். **28.08.2012** ஆம் தேதி அன்று G.சுமதி என்பவர் கணினி பரிவர்த்தனை மூலம் **ரூபாய் 50** ஆயிரம் பாண்டிமீனா கணக்கிற்கு செலுத்தியுள்ளார். **18.10.2012** ஆம் தேதி அன்று G.சுமதி என்பவர் கணினி பரிவர்த்தனை

மூலம் **ரூபாய் 30** ஆயிரம் பாண்டிமீனா கணக்கிற்கு செலுத்தியுள்ளார். **09.11.2012** ஆம் தேதி அன்று நேரடியாக **ரூபாய் 60 ஆயிரம்** பாண்டிமீனா கணக்கிற்கு ரொக்கமாக செலுத்துப்பட்டுள்ளது.

கு.வி:

23.08.2012 ஆம் தேதி மொத்தமாக 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் பாரத ஸ்டேட் வங்கி, திருப்பூர் கிளையில் இருந்து 2வது எதிரி பாண்டிமீனா வங்கி கணக்கான கரூர் வைசியா வங்கி எழுமலை கிளைக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்றால் ரூபாய் 50 ஆயிரம் மட்டும் செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி தொகை கணினி பரிவர்த்தனை மூலம் செலுத்தப்பட்டுள்ளது. எதற்காக பணம் செலுத்தப்பட்டது என்ற விபரம் இருக்காது என்றால் சரிதான்.

ம.வி:

இல்லை.